# முறை குடிநீர்!
# சலம் மக்கள்




கவுன்சிலரான ராஜ பாக்கியத்தின் 47 வார்டிலும் ஐந்து நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் தரப்படுகிறது. தி.மு.க. கவுன்சிலர்களான பூங்கொடி, சரளா ஆகியோரின் 41, 42 ஆகிய வார்டுகளில் மட்டும் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் கிடைக்கிறது.

பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுவதற்காக டெண்டர் விட்டிருக்கிறார்கள். ஆனால் திட்டம் நிறைவேறுவதற்கான அறிகுறியே இல்லை. அதிகாரிகளின் பற்றாக்குறையால் நிலை தடுமாறி நிற்கிறது மாநகராட்சி. தற்போது ஏ.சி.யாக தங்கவேல் இருக்கிறார். அவரால் அதிகபட்சமாக 16 டிவிஷன்களை மட்டுமே பார்க்க முடியும். ஆனால் அவர் அம்மாபேட்டை, கொண்டலாம்பட்டி உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட டிவிஷன்களை பார்க்கிறார். இதே நிலைதான் உதவி செயற்பொறியாளர் சீனிவாசனுக்கும்! பிறகு எப்படி மக்களுக்கு சேவை செய்ய முடியும்?

**பாண்டியன், 58வது வார்டு, அ.தி.மு.க.**

எங்கள் பகுதியிலுள்ள தாதகாபட்டி டேங்கில் அ.தி.மு.க. ஆட்சியின்போது 40 பாயிண்ட் குடிநீர் ஏற்றி மக்கள் பயன்பாட்டுக்கு கொடுத்தோம். ஆனால் தற்போது தி.மு.க. ஆட்சியில் 20 பாயிண்ட் மட்டுமே குடிநீர் கொடுக்கிறார்கள். இந்த மாநகராட்சியால் எந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற முடியாது. குடிநீரே வழங்க முடியாதவர்களால் பொதுமக்களுக்கு வேறு என்ன நன்மைகள் செய்துவிட முடியும்? பப்ளிக் குடிநீர் பைப்பில் இருந்து ஒரு குடும்பத்துக்கு ஐந்து குடம் குடிநீர் கிடைக்கும். அதுவும் இப்போது 10 நாட்களுக்கு ஒரு முறை கொடுப்பதால் எங்கள் பகுதியில் உள்ள 2500 வீடுகளைச் சேர்ந்த மக்களும் சாமியானா பந்தல் போட்டு போராட்டமெல்லாம் நடத்தினோம். மாநகராட்சி என்ஜினியர், ஏ.சி., மேயர், கமிஷனர் எல்லாம் வந்து பேசினார்கள். இரண்டு நாட்களில் குடிநீர் வழங்குவதாகவும் கூறினார்கள். ஆனால் சொல்லி ஆறு மாதம் ஆகிறது; குடிநீர் மட்டும் வந்தபாடில்லை. குடிநீர் வரவில்லை என்று தி.மு.க.வே போனக் கூட்டத்தில் வெளிநடப்பு செய்தது. ஆனாலும் நடவடிக்கையை மட்டும்


பாண்டியன்


தனசேகரன்